# யூலை – 14 – பொதுக்கால 15ம் வார ஞாயிறு

**“ஆண்டவரே! எனக்குப் பதில்மொழி தாரும்**
**உம் பேரன்பு நன்மை மிக்கது” – திபா 69:16**

---

## முதல் வாசகம் : இணைச்சட்டம் 30 : 10 - 14

அக்காலத்தில், மோசே மக்களை நோக்கிக் கூறியது : உன் கடவுளாகிய ஆண்டவரின் குரலுக்குச் செவிகொடு. சட்டநூலில் எழுதப்பட்டுள்ள அவர்தம் கட்டளைகளையும் நியமங்களையும் கடைப்பிடி. உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பு. ஏனெனில், இன்று நான் உனக்குக் கட்டளையிடும் இந்தக்கட்டளை உனக்குப் புரியாதது இல்லை உன்னிடமிருந்து வெகுதொலையிலும் இல்லை. ”நாம் அதைக்கேட்டு, நிறைவேற்றுமாறு, நமக்காக யார் விண்ணகத்துக்குப் போய், அதைக் கொண்டு வருவார்” என்று நீ சொல்லாதவாறு, அது விண்ணில் இல்லை. ”நாம் அதைக்கேட்டு நிறைவேற்றுமாறு, நமக்காக யார் கடல்கடந்து சென்று, அதை நம்மிடம் கொண்டு வருவார்” என்று நீ சொல்லாதவாறு, அது கடல்களுக்கு அப்பால் இல்லை. ஆனால், நீ அதை நிறைவேற்றுமாறு வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது. உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது.

**பதில்பாடல் :** கடவுளை நாடித் தேடுவோரே உங்கள்
உள்ளம் உக்கமடைவதாக.

## இரண்டாம் வாசகம் : கொலோசேயர் 1 : 15 - 20

சகோதரர் சகோதரிகளே! இயேசு கட்புலனாகாத கடவுளது சாயல் படைப்பனைத்திலும் தலைப்பேறு. ஏனெனில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, கட்புலனாகுபவை, கட்புலனாகாதவை, அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோர், ஆட்சியாளர், அதிகாரம்கொண்டோர் ஆகிய அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர். அனைத்தும் அவர் வழியாய் அவருக்காகப் படைக்கப்பட்டன. அனைத்துக்கும் முந்தியர் அவரே. அனைத்தும் அவரோடிணைந்து நிலைபெறுகின்றன. திருச்சபையாகிய உடலுக்குத் தலையும் தொடக்கமும் அவரே. எல்லாவற்றுள்ளும் முதன்மை பெறுமாறு இறந்து உயிர்த்தெழுவோருள் அவர் தலைப்பேறு ஆனார். தம் முழுநிறைவும் அவருள் குடிகொள்ளக் கடவுள் திருவுளம் கொண்டார். சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலைநாட்டவும் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர்வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார்.

## நற்செய்தி : லூக்கா 10 : 25 - 37

அக்காலத்தில், திருச்சட்ட அறிஞர் ஒருவர் எழுந்து அவரைச் சோதிக்கும் நோக்குடன், ”போதகரே, நிலைவாழ்வை உரிமையாக் கிக்கொள்ள நான் என்ன செய்யவேண்டும்?” என்று கேட்டார். அதற்கு இயேசு, ”திருச்சட்டநூலில் என்ன எழுதியிருக்கிறது? அதில் நீர் என்ன வாசிக்கிறீர்?” என்று அவரிடம் கேட்டார். ‘அவர் மறுமொழியாக, ”உன் முழுஇதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழுமனத்தோடும் உன்கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. உன்மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக” என்று எழுதியுள்ளது” என்றார். இயேசு, ”சரியாய்ச் சொன்னீர் அப்படியே செய்யும் அப்பொழுது வாழ்வீர்” என்றார். அவர், தம்மை நேர்மையாளர் எனக்காட்ட விரும்பி, ”எனக்கு அடுத்திருப்பவர் யார்?” என்று இயேசுவிடம் கேட்டார். அதற்கு அவர் மறுமொழியாகக் கூறிய உவமை ”ஒருவர் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகும்போது கள்வர் கையில் அகப்பட்டார். அவருடைய ஆடைகளை அவர்கள் உரிந்துகொண்டு, அவரை அடித்துக் குற்றுயிராக விட்டுப் போனார்கள். குரு ஒருவர் தற்செயலாய் அவ்வழியே வந்தார். அவர் அவரைக் கண்டதும் மறு பக்கமாக விலகிச் சென்றார். அவ்வாறே லேவியர் ஒருவரும் அவ்விடத்துக்கு வந்து அவரைக் கண்டதும் மறுபக்கமாய் விலகிச் சென்றார். ஆனால் அவ்வழியே பயணம் செய்துகொண்டிருந்த சமாரியர் ஒருவர் அருகில் வந்து அவரைக் கண்டபோது அவர்மீது பரிவுகொண்டார். அவர் அவரை அணுகி, காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்து, அவற்றைக் கட்டி, தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவரைக் கவனித்துக் கொண்டார். மறுநாள் இருதெனாரியத்தை எடுத்து, சாவடிப் பொறுப்பாளரிடம் கொடுத்து, ”இவரைக் கவனித்துக் கொள்ளும் இதற்கு மேல் செலவானால் நான் திரும்பி வரும்போது உமக்குத் தருவேன்” என்றார். ”கள்வர் கையில் அகப்பட்டவருக்கு இம்மூவருள் எவர் அடுத்திருப்பவர் என உமக்குத் தோன்றுகிறது?” என்று இயேசு கேட்டார். அதற்கு திருச்சட்ட அறிஞர், ”அவருக்கு இரக்கம் காட்டியவரே” என்றார். இயேசு, ”நீரும் போய் அப்படியே செய்யும்” என்று கூறினார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தி வாசகத்தில் இறைவனது கருணை, அவரது இரக்கம் என்பன நல்ல சமாரித்தனது செய்கையின் வாயிலாக தெளிவுபடுத்தப்படுகின்றது. நல்ல சமாரித்தன் இயேசுவைக் குறித்த அழியா வார்த்தைகள் இறைவனது கருணையை, இரக்கத்தை நினைவுபடுத்தி நாம் மறுவாழ்வு பெற்று இறைவனில் என்றும் நிலைத்திருக்க அழைக்கின்றன. பாவமென்னும் பாலைநிலத்தில் நெடும்பயணம் செய்யும் எம்மோடு இறைவன் தனது உடன்படிக்கையைப் புதுப்பிக்க விரும்பி தமது கட்டளை எமக்குப் புரியாததல்ல எனினும், அது எமக்கு வெகு தொலைவிலுமல்ல என்று கூறுகின்றார் (இணைச்சட்டம் 30:11). கட்புலனாகாத கடவுளின் மேன்மை எம்மனைவருக்கும் வழங்கப்படுவதற்காக திருச்சபையாகிய உடலின் தலையும், தொடக்கமுமான திருமகன் இயேசு சிந்திய பரிசுத்த இரத்தத்தால், நாம் இறைவனோடு ஒப்புரவாகுவதனை (கொலோசேயர் 1:20) மேலும் தெளிவுபடுத்துகின்றார். கள்வர் கையில் அகப்பட்ட மனிதன்போல, இவ்வுலக மாயைகளின் அதிபதி சாத்தானின் கையில் அகப்பட்டு, பாவத்தில் வீழ்ந்து எமதுள்ளத்தை பணம், பட்டம், பதவி, பகட்டு, போலிவாழ்க்கை, வரட்டுக் கௌரவம் போன்ற மாயக்கவர்ச்சியில் பறிகொடுத்தவர்களாக நாம் வாழவில்லையா?. இறைவன் வாழும் ஆலயமாகிய எமது இதயத்தில் வேதவார்த்தைகளுக்குப் பதிலாக மனிதப் போதனைகள், தத்துவங்கள், கொள்கைகள் ஆளுகை செய்யவில்லையா? எனினும் கள்வர் கையில் அகப்பட்டு குற்றுயிரா, கிடந்த வழிப்போக்கனை நல்ல சமாரித்தன் எண்ணெயும், திராட்சை இரசமும் இட்டுக் குணப்படுத்தியது போன்று, பாவச்சேற்றில் அகப்பட்டு எழும்ப முடியாதிருக்கின்ற எம்மை இறைமகன் இயேசுவும் தமது பரிசுத்த இரத்தத்தால் கழுவி விடுதலை அளிக்க முயல்வதனை நாம் உணர்ந்து, விசுவசித்து அதற்கேற்ப மறுவாழ்வு வாழ ஏன் நாம் தயங்குகின்றோம்.? “நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னோடு உனக்குப் பங்கில்லை” என்றருளிய இறைவனது கருணை, இரக்கம் எம்மை நெருங்கிவர எந்தவிதத்தினில் நாம் அருகதையுடையவர்கள் என சிந்திப்போம். நல்ல சமாரித்தன் இயேசு மீண்டும் ஒருமுறை எமது மத்தியில் வந்து பிறந்து மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள் என்று போதிக்க அவர் மீண்டும் வரமாட்டார்.